திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு, உத்தியோகங்களிலும் இதர துறைகளிலும் 16 சதவீத இடம் ஒதுக்கப்படுகிறது. அதை உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இன்றைக்கு அந்த 16 சதவீதமே சரியாகப் பூர்த்திசெய்யாத நிலையிலேதான் இருந்து கொண்டு வருகிறது. ஏறத்தாழ 5 அல்லது 6 சதவீதம் தான் பூர்த்தி செய்யப்பட்டு வந்திருக்கிறது. அவைகளைப் பரிசீலித்து அந்த 16 சத வீத இடத்தைப் பூர்த்தி செய்வது எப்படி என்பதைக் குறித்து ஆராய ஒரு ஹை பவர் கமிட்டி நியமிக்கப்பட்டு, அந்தக் கமிட்டி இன்றைக்கு எல்லாத் துறைகளிலேயும் இந்தச் சமுதாய மக்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள், மேலும் எத்தனை பேருக்கு உயர்வு தர முடியும் என்பதை யெல்லாம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது. 16 சத வீதமே பூர்த்தி செய்ய முடியவில்லையென்றால், அதை உயர்த்துவது என்பது சாத்தியம் அல்ல.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அகமுடையர் என்று ஒரு வகுப்பு இருக்கிறது. பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் "அகமுடையர்" என்று இருக்கிறது. என்றாலும், அரசாங்கத் திடம் சலுகைகளைப் பெற மனுக்கள் போடும்போது, "அகமுடையன்" என்பதற்கு பதிலாக "அகமுடையர்" என்று போட்டிருக்கும் காரணத்தால் பலருக்குச் சலுகை கிடைக்காமல் போய்விடுகிறது. இந்த "இன்" "இர்" வேறுபாட்டைப் போக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : "அகமுடையன்" "அகமுடையர்" என்கின்ற வேறுபாட்டைப்பற்றி இதுவரையிலும் அரசாங்கத் திற்கு எந்தவித புகாரும் வரவில்லை. ஆனால், கனம் உறுப்பினர் அவர் கள் அதைப்பற்றி கூறுகிறார். அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யும்.

செட்டிநாடு சிமெண்ட் கார்ப்போரேஷனுக்குக் கடன்.

*121 வினா—**திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், புலியூரிலுள்ள செட்டிநாடு சிமெண்ட் கார்ப்ப ரேஷனுக்கு அரசினர் எவ்வளவு ரூபாய் கடன் தந்துள்ளனர் ?

(இ) அதை எப்போது திருப்பித்தரப்பட வேண்டும் என வரைமுறை ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) செட்டிநாடு சிமெண்ட் கார்ப்ப ரேஷனுக்கு அரசினர் கடன் ஏதும் கொடுக்கவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை.

*122 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தாராபுரம் கூட்டுறவு நூற்பு ஆலையில் 1966–67-ஆம் வருடத் தில் கிடைத்த லாபம் என்ன ?

(இ அதில் பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தாராபுரம் கூட்டுறவு நூற்பு ஆலை 1966–67-ம் ஆண்டில் ரூ. 2,17,107·10 நஷ்டம் அடைந்தது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, அந்த நூற்பாலையில் வேலை ஒழுங்காக நடைபெறுவதாகத் தெரிகிறது. அப்படியிருக்க அதில், நஷ்டம் ஏற்படக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த ஆண்டு, குறிப்பாக, "க்ராஸ் ப்ராஃபிட்" என்ற வகையில் லாபம் கிடைத்தது. ஆனால், அதற்கு முன்னால் கிடைத்த நஷ்டங்களையெல்லாம் ஈடுகட்ட வேண்டியிருந்ததால், "நெட் லாஸ்" ஆக நான் ஏற்கனவே குறிப்பிட்ட தொகை வந்திருக்கிறது. பொதுவாக, டெக்ஸ்டைல் க்ரைஸிஸ் அந்த ஆலையையும் பாதித்திருக்கிறது.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவர் அவர்களே, தாராபுரம் நூற்பாலையில் பங்குதாரர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், பங்குத்தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. பி. வேலுசாமி : தாராபுரம் கூட்டுறவு ஆலையில் வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் முன் அனுபவம் உள்ளவர் யாராவது நியமிக்கப்பட்டிருக்கிறாரா ? அப்படியானால், அவருடைய முன் அனுபவம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்த நூற்பாலையில் மொத்தம் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் ? இரண்டு லட்ச ரூபாய்க்குமேல் நஷ்டம் வந்திருக்கிறது. நஷ்டத்தின் காரணமாக பல நூற்பாலைகள் மூடப்பட்டிருப்பதுபோன்ற கதி இதற்கு ஏற்படாமல் அரசு பார்த்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கு 601 பேர் வேலை செய்கிறார்கள். 12,000 ஸ்பின்டில்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பொதுவாக இந்த நூற்பாலைத் துறை பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இதுவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பொது நன்மை கிடைக்கும்போது இந்த ஆலைக்கும் நன்மை கிடைக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பொதுவாக, கூட்டுறவுத் துறையில் இயங்கும் நூற்பாலைகளைப் பொறுத்தவரையில் எஸ்டாப்ளிஷ்மென்ட் செலவு அதிகமாக இருக்கும் காரணத்தால் நஷ்டம் ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய நூற்பாலைகளெல்லாம் வேலை செய்யத் தொடங்கிய காரணத்தால் நூற்பாலைத் துறைக்குப் பெரிய பிரச்சினை வந்துவிட்டது. அதன் காரணமாக இதுவும் பாதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, தனியாக இதற்கென்று ஒரு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : கூட்டுறவு நூற்பாலைக்கு நஷ்டம் ஏற்படுவதற்கு ஒரு காரணம் பஞ்சு வாங்குவதிலே உள்ள ஊழல் என்ற அபிப்பிராயம் இருக்கிறது. ஆகவே, கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டுறவு ஜின்னிங் பாக்டரியிலிருந்து தான் பஞ்சு வாங்கவேண்டும் என்ற ஒரு கட்டாயத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : பஞ்சுகளை மொத்தமாக கூட்டுறவு நூற்பு ஆலைகள் எப்படி வாங்குவது என்பது குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய நூற்பாலைக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு நூற்பாலைக்கும் நஷ்டம் வந்துகொண்டிருப்பதால் இதற்கு மட்டும் தனியாகக் காரணம் சொல்லமுடியாது.

திரு. தோ. மு. நல்லசாமி : கூட்டுறவு நூற்பாலைகள் நம் மாநிலம் பூராவிலும் அநேகமாக எல்லாமே நஷ்டத்திலேதான் வேலை செய்து கொண்டிருக்கின்றன என்கிறார்கள். கூட்டுறவு நூற்பாலைகளை ப்ரொமோட் பண்ணியவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் அதிலே ஷேர் வசூல் செய்யும்போது நிச்சயம் லாபம் வரும் என்ற முறையில் செய்யப் பட்டது. தற்போது தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் ஷேர் போட்டவர்களுக்கு ஷேர் தொகை திருப்பிக் கிடைக்க வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலில் முதல் போட்டவர்கள் அந்தத் தொழிலில் உள்ள லாப நஷ்டத்தை ஏற்கத்தான் வேண்டும். திருச்செந்தூர் கூட்டுறவு ஆலையில் லாபம் சிறிது இருப்பதாகப் புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது. தற்போது மத்திய அமைச்சரவை அறிவித் திருக்கக்கூடிய சலுகையின் காரணமாக மீண்டும் இந்த நூற்பாலைகள் லாபத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : தமிழ்நாட்டிலுள்ள எந்தக் கூட் டுறவு ஆலையிலாவது லாபம் கிடைத்ததுண்டா ? பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் பங்கு வாங்கி யிருக்கிறாரா என்பது தெரியவில்லை. திருச்செந்தூர் கூட்டுறவு நூற் பாலையில் லாபம் இருப்பதாகப் புள்ளிவிவரம் இருக்கிறது. பங்கு பிரித்துக் கொடுத்தது பற்றிய தகவல் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி : கூட்டுறவு நூற்பாலைகளில் நஷ்டம் ஏற்படு வதற்கு முக்கிய காரணம் நூலுக்கு வேண்டிய பஞ்சு வாங்கும் குழுவில் பஞ்சு பற்றிய தர நிர்ணயம் தெரியாதவர்கள் இருப்பதுதான். திருச் செந்தூர் ஆலையில் லாபம் வருவதற்குக் காரணம் பஞ்சு வாங்கும் குழு வில் அந்த வியாபாரத்தில் தேர்ந்த ஒருவர் இருப்பதுதான். இனியாவது எல்லா நூற்பாலைகளிலும் பஞ்சின் நுட்பம் தெரிந்தவர்களைக் குழுவில் போட அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபோன்ற ஒரு கருத்து அரசாங் கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு 12 கூட்டுறவு நூற்பாலைகளிலும் பஞ்சு வாங்கு வது எப்படி என்பதற்கான குழு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. முழு விவரம் இல்லை.

வேளாண்மைக் கருவிகள் உற்பத்தி

*123—வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா :—

விவசாய உற்பத்திக்கு உறுதுணையான உழு கருவிகள், டிராக்டர்கள் போன்றவற்றைத் தமிழக அரசாங்கமே தயாரிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தமிழக அரசுக்கு சொந்தமான சிறு தொழில் கார்ப்பரேஷனின்கீழ் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வரும் வேளாண்மைக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை, தற்பொழுது பல வகையான உழு கருவிகளை உற்பத்தி செய்கின்றது. டிராக்டர்கள் உற்பத்திச் செய்வதற்கான திட்டம்ஒன்றும் இப்பொழுது அரசிடம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது உழு கருவிகள், டிராக்டர்கள் ஆகியவற்றை விலைக்கு வாங்கி விவசாயி களுக்கு வாடகைக்கு கொடுக்கின்றன. ஆனால் அவைகளிலே பெரும் பாலானவை உழைப்பிலும், விலை பெறுமானத்திலும் தரமானவையாக இல்லையென்பது அனுபவத்தில் காணப்படுகின்ற உண்மையாகும். நம்